**Viduthalai, Chennai, 10 Dec 12**

# பள்ளி மாணவர்களுக்கான அறிவுத்திறன் போட்டிகள்

**சென்னை, டிச.10–** இந்தியா முழுவதுமுள்ள பள்ளி மாணவர்களுக்கான கணினி மென்பொருள் சார்ந்த அறிவுத்திறன் மேம்பாட்டிற்கான வினாடி வினா போட்டி சென்னையில் நடைபெற்றது.

பள்ளிகளுக்கு இடையிலான டி.சி.எஸ். அய்.டி விஸ் வினாடி வினா போட்டி, சென்னை, அகமதாபாத், பெங்களூரு, புவனேஸ்வர், கோயம்பத்தூர், டில்லி, அய்தராபாத் உள்பட 113 இடங்களில் நடைபெற்ற போட்டியில் 3500 பள்ளிகளைச் சேர்ந்த 7 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்றனர்.

சென்னை தாஸ் கோரமண்டல் அரங்கில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கிய டாடா கன்சல்டன்சி நிறுவனத்தின் முதன்மைச் செயல் அதிகாரி என்.சந்திரசேகரன் பேசுகையில்:–

இப்போட்டியில் இறுதிச்சுற்றில் பங்கேற்ற மாணவர்கள் தங்களது திறன் வெளிப்படுத்திய விதம் பார்ப்பதற்கு உற்சாகமளிப்பதாக அமைந்திருந்தது. இளைஞர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, நமது நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக கருதப்படும் அவர்களிடம் காணப்படும் திறன்களை அவர்கள் உணரச் செய்வதில் டிசிஎஸ் நிறுவனம் நம்பிக்கை கொண்டுள்ளது என்று தெரிவித்தார்.